குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 71/2020

அ.சா.4

2026–ம் ஆண்டு ஜனவரி 20–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஷ்ணு | தொழில் | |
| தந்தை பெயர் | கணேசன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.05 மணி,

Accused Arivalagan absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் வேலகவுண்டனூரில் குடியிருந்து, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எனது வீடு ஓமலூர் – தாரமங்கலம் செல்லும் சாலையில் விஸ்டம் பள்ளி அருகே உள்ளது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் இரவு 09.00 மணியளவில் வீட்டில் இருந்தபோது, சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்போது, ஓமலூர் – தாரமங்கலம் செல்லும் சாலையில் விபத்து நடந்திருந்தது. ஸ்கூட்டி இருசக்கர வாகனம் கீழே விழுந்து கிடந்தது.

2. நான் செல்வதற்குள்ளாக இருசக்கர வாகனத்தில் வந்து காயமடைந்த நபரை ஆம்புலன்சில் ஏற்றிச் சென்று விட்டார்கள். சம்பவ இடத்தில் லாரியும் இருந்தது. எந்த வாகனம் மோதி விபத்து நடந்தது என்று நான் பார்க்கவில்லை. மறுநாள் காலை போலிசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். விபத்து நடந்தது குறித்து என்னை விசாரித்தார்கள். சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்று சொன்னேன்.

3. விபத்து நடந்த இடத்தை போலிசாருக்கு அடையாளம் காட்டினேன். பின்பு, போலிசார் என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.01.20 17:44:13 +0530

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி சம்பவத்தை நேரில் பார்த்தது பொறுத்தமட்டில் பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. சம்பவ இடம் வேலகவுண்டனூர் செங்கல்சூளைக்கு பேருந்து நிறுத்தம் அருகே உள்ளது என்றால் சரி. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 17.12.2018 ஆம் தேதி இரவு 09.30 மணியளவில் ஓமலூர் – தாரமங்கலம் சாலையில்வேலகவுண்டனூர் செங்கல் சூளை பேருந்து நிறுத்தம் அருகே கணேசன் என்பவர் டி.என்.30 பி.வி.3444 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் தாரமங்கலம் நோக்கி சாலையின் வலது பக்கமாக சென்றபோது, அதே சாலையில் அவருக்கு எதிர்திசையில் ஓமலூர் நோக்கி வந்த டி.என்.52 ஜே.2090 என்ற பதிவெண் கொண்ட லாரியை எதிரி அறிவழகன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து, கணேசன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி, விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்துவிட்டு, விசாரணையின்போது கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு தான் சம்பவ இடம் சென்றேன். அ.சா.3 பாரதி எனது அக்காமகன். நான் பார்வை மகஜரில் கையெழுத்து செய்தபோது, சம்பவ இடத்திற்கு எத்தனை போலிசார் சீருடையில் வந்திருந்தார்கள் என்றால், எனக்கு நினைவில்லை. அப்போது சம்பவ இடத்தில் பொதுமக்கள் சுமார் 15 பேர் இருந்தார்கள். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.15 மணி**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.01.20 17:44:17 +0530